செ.வெ.எண்:31 நாள்:13.04.2018

**அரசுத் தேர்வுத் துறை, சென்னை 600 006**
**தொடக்கக் கல்விபட்டயத் தேர்வு, ஜுன் 2018**
**தனித்தேர்வர் அனுமதி**

**செய்திக் குறிப்பு**

**ஜுன் 2018–ல் நடைபெறவுள்ள தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வுகள் 04.06.2018** அன்று தொடங்கி **21.06.2018** வரை நடைபெறவுள்ளது.

மேற்படி தேர்விற்கு தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பத்தையும், பக்கம் 1 முதல் 3 வரையுள்ள அறிவுரைகளையும் பதிவிறக்கம் செய்துகொண்டு தேர்வரின் தகுதி மற்றும் அறிவுரைகளையும் பின்பற்றி பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் ஏற்கனவே தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றிதழ்களின் அனைத்து நகல்களையும் கண்டிப்பாக இணைத்து தேர்வர் வசிக்கும் மாவட்டத்திற்கு அருகில் அமைந்துள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் கீழ்க்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்குமாறும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பொருத்தப்பட்டுள்ள (Web Camera) மூலமாக புகைப்படம் எடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளதால், அந்நிறுவனங்களிலேயே புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்துகொண்ட பின்னர் அங்கேயே தேர்வுக் கட்டணம் செலுத்த தேர்வரே நேரில் சென்று அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**உரியதேர்வுக் கட்டணவிவரம்**

| | |
|---|---|
| **ஒவ்வொருபாடத்திற்கும்** | **ரூ. 50/–** |
| **மதிப்பெண் சான்றிதழ் (முதலாமாண்டு)** | **ரூ.100/–** |
| **மதிப்பெண் சான்றிதழ் (இரண்டாமாண்டு)** | **ரூ.100/–** |
| **பதிவுமற்றும் சேவைக்கட்டணம்** | **ரூ. 15/–** |
| **ஆன்–லைன் பதிவுக் கட்டணம் (ஒருவிண்ணப்பத்திற்கு )** | **ரூ. 50/–** |

**தேர்வுக் கட்டணம் செலுத்த மற்றும் விண்ணப்பங்கள்**
**சமர்ப்பிக்க வேண்டிய நாட்கள்**

**உரிய தேர்வுக் கட்டணம் செலுத்த 16.04.2018 முதல் 21.04.2018 வரை**

தகுதியற்ற தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுமெனில் எவ்வித முன்னறிவிப்புமின்றி தேர்வு அனுமதி இரத்து செய்யப்படும். **தபால் மூலமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.**

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.